# 8

# விழாக்கள்

**செயற்பாடு 1**

**படங்களைப் பார்ப்போம்; கலந்தரையாடுவோம்; விழாக்களின் பெயர்களை வாசிப்போம்; பொருத்தமான மாதத்தைத் தெரிவு செய்வோம்; எழுதுவோம்.**


நத்தார்


தைப்பொங்கல்


றமழான்


வெசாக்


தீபாவளி


பொசன்


சுதந்திர தினம்


சித்திரைப் புத்தாண்டு




## செயற்பாடு 2

**சோடிகளாகச் சேர்வோம்; வினாக்களை வினவுவோம்; விடை அளிப்போம்.**

உதாரணம் :- ▲ வெசாக் எந்த மாதத்தில் வரும்?

● வெசாக் மே மாதத்தில் வரும்.

1. நத்தார் எந்த மாதத்தில் வரும்?
2. சித்திரைப் புதுவருடம் எந்த மாதத்தில் வரும்?
3. றமழான் எந்த மாதத்தில் வரும்?
4. தைப்பொங்கல் எந்த மாதத்தில் வரும்?

## செயற்பாடு 3

**பண்டிகைகளைச் சமய அடிப்படையில் வகைப்படுத்துவோம்.**

| பௌத்தம் | இந்து | கிறிஸ்தவம் | இஸ்லாம் |
|---|---|---|---|
| | | | |

## செயற்பாடு 4

**செயற்பாடுகளைக் கலந்துரையாடுவோம்; விழாக்களை இனங்காண்போம்; தரப்பட்டுள்ள விழாக்களின் கீழ் செயல்களை எழுதுவோம்.**

வெசாக் கூடு செய்வோம், பொங்கல் செய்வோம், தீபங்கள் ஏற்றுவோம், மருத்து நீர் வைப்போம், நத்தார் மரத்தை அலங்கரிப்போம், ஏடு தொடக்குவோம், யாத்திரை செய்வோம்.















1. வெசாக் __________________________

2. தீபாவளி __________________________

3. சித்திரைப் புத்தாண்டு __________________________

4. ஹஜ் __________________________

5. ரம்ழான் பண்டிகை <u>நோன்பு இருப்போம்</u>.

6. நத்தார்ப் பண்டிகை __________________________

7.தைப்பொங்கல் __________________________



## செயற்பாடு 5

**நாட்காட்டியை அவதானிப்போம்; ஜனனி பிறந்த மாதத்தைக் கண்டு பிடிப்போம்.**

● ஜனனி பிறந்த மாதம் எது?

▲ ____________ மாதம் பதினைந்தாம் திகதி.

● உங்களுடைய பிறந்த தினம் எப்போது?

▲ ____________ மாதம் ____________ திகதி.

24

## செயற்பாடு 6

**ஆசிரியர் திகதிகளைக் கூற எழுதுவோம்.**

உதாரணம் 02.05

| | |
|---|---|
| 1. ________________ | 2. ________________ |
| 3. ________________ | 4. ________________ |
| 5. ________________ | 6. ________________ |

## செயற்பாடு 7

**திகதியை வாசித்து எழுதுவோம்.**

உதாரணம்

1. 03.10 - மார்ச் மாதம் பத்தாம் திகதி
2. 04.05 - ________________________
3. 07.03 - ________________________
4. 06.28 - ________________________
5. 02.14 - ________________________

## செயற்பாடு 8

**நண்பர்களுடன் கலந்துரையாடுவோம்; அட்டவணையில் அவர்களின் பெயரையும், பிறந்த திகதியையும் எழுதிக் கொள்வோம்.**

| | பெயர் | பிறந்த திகதி |
|---|---|---|
| | உ+ம் : சிவா | மே மாதம் 10 ஆம் திகதி |
| 1 | | |
| 2 | | |
| 3 | | |
| 4 | | |
| 5 | | |

## செயற்பாடு 9

# நத்தார்ப் பண்டிகை



எனது நண்பனின் பெயர் டானியல். டானியல் கிறிஸ்தவர். இயேசுநாதர் பிறந்த நாள் நத்தார்ப் பண்டிகை தினமாகும். ஒவ்வொரு வருடமும் டிசெம்பர் மாதம் இருபத்தைந்தாம் திகதி நத்தார்ப் பண்டிகை கொண்டாடப்படும்.

கடந்த வருடம் நத்தார்ப் பண்டிகைக்கு முதல் நாள் டானியல் வீட்டிற்குச் சென்றேன். இருவரும் வீட்டை அழகாக அலங்கரித்தோம். டானியலின் அப்பா கிறிஸ்மஸ் மரத்தை வைத்தார். அதில் வண்ண வண்ண மின்குமிழ்கள், வாழ்த்து அட்டைகளால் நானும் டானியலும் அலங்கரித்தோம்.

டானியலின் அண்ணா சிறிய மாட்டுத் தொழுவத்தை அமைத்தார். நாங்கள் அதனுள் பாலன் இயேசுவை வைத்தோம். நானும் டானியலும் அவனது அண்ணா, அம்மா, அப்பா எல்லோரும் புதிய ஆடைகளை அணிந்தோம்.

எல்லோரும் அன்று இரவு பன்னிரெண்டு மணிக்கு தேவாலயம் சென்றோம். பூசையில் பங்குபற்றினோம். தேவாலயத்திலிருந்து வீடு திரும்பியதும், டானியலின் குடும்பத்தினருடன் சேர்ந்து, சிற்றுண்டிகள், இனிப்புக்கள் சாப்பிட்டு, நத்தார்ப் பண்டிகையைச் சந்தோசமாகக் கொண்டாடி மகிழ்ந்தோம்.

## சொல் அறிமுகம்

| | |
|---|---|
| **நத்தார்** | - නත්තල් |
| **கிறிஸ்தவம்** | - ක්‍රිස්තියානි |
| **மாதம்** | - මාසය |
| **பிறந்த நாள்** | - උපන් දිනය |
| **இருபத்தைந்தாம்** | - විසිපස්වන |
| **அலங்காரம்** | - සැරසිලි |
| **சிற்றுண்டி** | - අතුරුපස |
| **பண்டிகை** | - උත්සවය |
| **மாட்டுத் தொழுவம்** | - ගවගාල |
| **புதிய ஆடை** | - අලුත් ඇඳුම |

## செயற்பாடு 10

**சரி (✓) பிழை (×) இடுவோம்.**

1. நத்தார் நவம்பர் 25 இல் கொண்டாடப்படுகிறது. ☐
2. டானியல் இந்து சமயத்தவர். ☐
3. டானியலின் அப்பா கிறிஸ்மஸ் மரத்தை வைத்தார். ☐
4. டானியலின் தம்பி மாட்டு தொழுவத்தை அமைத்தார். ☐

## செயற்பாடு 11

**படத்தைப் பார்ப்போம்; கலந்துரையாடுவோம்; இடைவெளிகளை நிரப்புவோம்.**

***(பரிசுப் பொருட்கள், நத்தார் மரம், நத்தார்த் தாத்தா, பாலகன் இயேசு)***



______________



______________



______________



______________

## செயற்பாடு 12

**பின்வரும் சொற்களை அவதானிப்போம்; வாசிப்போம்; இடைவெளிகளை நிரப்புவோம்.**

விழா - விழாவா?

வரலாம் - வரலாமா?

முடியும் - ____________

மட்டும் - ____________

## செயற்பாடு 13

**பின்வரும் வாக்கியங்களைப் பொருத்தமான சொற்களைக் கொண்டு முழுமைப்படுத்துவோம்.**

போவீர்களா? வைப்பீர்களா? செய்வீர்களா?
கொண்டாடுவீர்களா?

1. நீங்கள் மாட்டுத் தொழுவத்தை அமைப்பீர்களா?

2. நத்தார்ப் பண்டிகை ____________

3. நத்தார் மரத்தை ____________

4. நீங்கள் சிற்றுண்டி ____________

5. தோவாலயம் ____________



## செயற்பாடு 14

**பின்வரும் வினைச் சொற்களை வைத்து வினா வாக்கியங்களை உருவாக்குவோம்.**

1. ஒரு மாணவனுக்குப் பந்தை வீசுங்கள்.
2. வினா ஒன்றை வினவுங்கள்.
3. ஆம்/ இல்லை எனப் பதில் கூறுங்கள்.

உதாரணம்.

- ■ நீங்கள் தமிழ் படிக்கிறீர்களா?
- ▲ ஆம்/ இல்லை.

1. பாடுகிறீர்களா?
2. போ ____________________
3. எழுது ____________________
4. படிக்கிறீர்களா?
5. குளி ____________________
6. ஆடுகிறீர்களா?
7. வரு ____________________
8. சாப்பிடு ____________________
9. குடி ____________________
10. தூங்கு ____________________



## செயற்பாடு 15

**குழுவாக இணைவோம்; விரும்பிய விழா ஒன்றைப் பற்றிக் குழுவுடன் கலந்துரையாடுவோம்; ஏனையோருக்கும் விளக்குவோம்.**

- விழாவின் பெயர்.
- விழா எப்போது நடைபெறும்?
- யாரோடு கொண்டாடுவீர்கள்?
- விழாவில் செய்யும் செயற்பாடுகள்.
- விசேட அம்சங்கள் (உணவு, விளையாட்டு, கலை நிகழ்ச்சி)
- வளர்க்கப்படும் நற்பண்புகள்.





# செவிமடுப்போம் உச்சரிப்போம்



25

ப

 බ | ප

| | |
|---|---|
| பந்து | கும்பம் |
| புத்தாண்டு | தம்பி |
| பண்டிகை | சம்பல் |
| பூசை | |
| தைப்பொங்கல் | |



## දැන් මට පුළුවන්

| | ✓ලකුණු කරන්න | | |
|---|---|---|---|
| | ඉතා හොඳයි | හොඳයි | සාමාන්‍ය |
| 1. මාස කීම | | | |
| 2. මගේ උපන් දිනය කීම හා මිතුරන්ගෙන් උපන් දිනය ඇසීම | | | |
| 3. නත්තල් උත්සවය ගැන විස්තර කීම | | | |
| 4. ප්‍රශ්න ඇසීම | | | |
| 5. ப අක්ෂරයේ ප, බ යන උච්චාරණ වෙනස්කම් හඳුනා ගැනීම | | | |